பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

22 09 2024 **SUNDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. இந்திய பசிபிக் மண்டலத்தில் புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் சிகிச்சைக்காக ஏழு புள்ளி ஐந்து மில்லியன் அமெரிக்க டாலரை இந்தியா வழங்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

2. பத்தாவது காமன்வெல்த் கூட்டமைப்பின் இந்திய மண்டல மாநாடு நாளை புதுதில்லியில் தொடங்குகிறது.

3. இலங்கை அதிபர் தேர்தல் முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையில் எந்தவொரு வேட்பாளருக்கும் 50 சதவீத வாக்குகள் கிடைக்காத நிலையில், இரண்டாவது சுற்று எண்ணிக்கை தற்போது நடைபெற்று வருகிறது.

4. மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதியில் நாளை குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. **Gama** சர்வதேச தற்காப்பு கலைக்கான சாம்பியன் பட்டத்தை இந்திய மல்யுத்த வீரர் சங்ராம் சிங் வென்றுள்ளார்.

<<<<<>>>>>

இந்திய பசிபிக் மண்டலத்தில் புற்றுநோய் ஆராய்ச்சி பரிசோதனை மற்றும் சிகிச்சைக்காக ஏழு புள்ளி ஐந்து மில்லியன் அமெரிக்க டாலரை இந்தியா வழங்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

அமெரிக்காவின் **Wilmington** நகரில் நடைபெற்ற புற்றுநோய் தொடர்பான குவாட் திட்ட நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர், இதனை அறிவித்தார்.

இந்தோ – பசிபிக் மண்டலத்தில் புற்றுநோய்க்கான கதிர் இயக்க சிகிச்சை, புற்றுநோய் தடுப்புக்கான திறனை வளர்த்தல் போன்றவற்றுக்கு இந்த தொகை செலவிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் பராமரிப்புக்கான தொழில்நுட்ப உதவிகளை குவாட் நாடுகளுக்கு இந்தியா தொடர்ந்து வழங்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

குவாட் அமைப்பு திட்டத்தின்மூலம், கர்ப்பப்பை புற்றுநோய்க்கான பராமரிப்பு மற்றும் சிகிச்சையை மேற்கொள்வதற்கு உறுப்பு நாடுகள் உதவ வேண்டும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

இந்தோ – பசிபிக் பொருளாதார அமைப்புக்கும், இந்தியாவுக்கும் இடையே பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

அமெரிக்காவில் மூன்று நாள் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னிலையில், **Delaware**-வில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.

இதில், தூய்மைப் பொருளாதாரம் தொடர்பான ஒப்பந்தம், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, பணியாளர் மேம்பாடு, திறன் மேம்பாடு, ஆராய்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்துள்ளன.

சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்களில் புதிய முதலீடுகளை மேற்கொள்வதற்கும் இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது.

இந்தோ – பசிபிக் மண்டலத்தில் நியாயமான, வெளிப்படையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மற்றொரு ஒப்பந்தம் வகை செய்கிறது.

<<<<<>>>>>

பத்தாவது காமன்வெல்த் நாடாளுமன்ற கூட்டமைப்பின் இந்திய மண்டல உச்சிமாநாடு நாளை புதுதில்லியில் தொடங்குகிறது.

மக்களவைத் தலைவரும், இந்திய மண்டலத்தின் தலைவருமான திரு ஓம். பிர்லா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் காமன்வெல்த் நாடுகளின் 46 அவைத்தலைவர்கள், துணைத்தலைவர்கள் பங்கேற்கிறார்கள்.

இந்திய நாடாளுமன்றத்தின் மக்களவை மற்றும் மாநிலங்களவை தலைவர், துணைத்தலைவர்கள் மற்றும் மாநில சட்டப்பேரவைகளின் தலைவர்கள், யூனியன் பிரதேசங்களின் அவைத்தலைவர்களும் இதில் பங்கேற்க உள்ளனர்.

அவைகளின் முதன்மைச்செயலர்கள் மற்றும் உயரதிகாரிகளும் இந்த உச்சிமாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

உள்ளார்ந்த வளர்ச்சியில், நாடாளுமன்ற அவைகள் மற்றும் சட்டமன்றங்களின் பங்கு என்ற கருப்பொருளுடன் இந்த உச்சிமாநாடு நடைபெறுகிறது.

<<<<<>>>>>

இந்தியாவில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான புதிய சேவை அலுவலகத்தை சிங்கப்பூரில் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் இன்று தொடங்கிவைத்தார்.

இந்தியாவில் முதலீடு செய்ய விரும்பும் சிங்கப்பூரைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களுக்கு தேவையான ஆலோசனைகளையும், உதவிகளையும் இந்த சேவை அலுவலகம் மூலம் செய்து தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் பிரதமர் திரு நரேந்திர மோடி சிங்கப்பூர் சென்றிருந்தபோது இந்தியாவின் முதலீட்டு அலுவலகத்தை அமைப்பது குறித்த அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

அலுவலகத்தை திறந்துவைத்து பேசிய திரு பியூஷ் கோயல், சிங்கப்பூர் மற்றும் ஆசியான் மண்டலத்தில் உள்ள நாடுகளுக்கு இடையே பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் இந்தியாவின் சார்பில் இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வரும் நாட்களில் உலகின் பல்வேறு பகுதிகளில் இந்திய முதலீட்டுக்கான சேவை அலுவலகங்களை திறக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

இலங்கை அதிபர் தேர்தலில் முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையில் எந்தவொரு வேட்பாளரும் 50 சதவீத வாக்குகளை பெறாத நிலையில் இரண்டாவது சுற்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது.

அந்நாட்டு அதிபர் தேர்தலில் மூன்று வேட்பாளர்களுக்கு வரிசைக்கிரமமாக இரண்டாவது இடத்தில் வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் இந்த சுற்றில் எண்ணப்படுகின்றன.

இரண்டாவது சுற்றிலும் யாரும் 50 சதவீதம் வாக்குகள் பெறாத நிலையில், மூன்றாவது சுற்று வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

தேர்தல் ஆணையம் விடுத்த முடிவுகளின்படி, திரு **Anura Kumara Dissanayake** 41 சதவீத வாக்குகளும், திரு **Sajith Premadasa** 33 சதவீத வாக்குகளும் பெற்றிருந்தனர்.

தன்னிச்சையாக போட்டியிட்ட தற்போதைய அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே, மூன்றாவது இடத்தில் 17 சதவீத வாக்குகளுடன் உள்ளார்.

<<<<<>>>>>

தேசிய மாணவர் படையில், மாநில பிரதிநிதிகள் மற்றும் துணைத்தலைமை இயக்குனர்களின் மாநாடு நாளை புதுதில்லியில் நடைபெறுகிறது.

மத்திய பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு சஞ்சய் சேத், இம்மாநாட்டிற்கு தலைமை வகிக்க உள்ளார்.

தேசிய மாணவர் படையில் மேலும் மூன்று லட்சம் பேரை சேர்ப்பதற்கான விரிவாக்கத் திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவருவது குறித்து இம்மாநாட்டில விவாதிக்கப்பட உள்ளது.

இதனையடுத்து, நாடு முழுவதிலும் உள்ள தேசிய மாணவர் படையினரின் எண்ணிக்கை 20 லட்சமாக உயரும்.

தேசிய மாணவர் படை அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை மேற்கொள்வது, புதிய கொள்கைகளை வகுப்பது, பயிற்சித் திட்டங்கள், என் சி சி முகாம்களுக்கான கட்டமைப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

இந்த மாநாட்டில் ராஜஸ்தான், அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், கர்நாடகா, கேரளா, உத்தராகண்ட் மற்றும் கோவா அமைச்சர்களும், அனைத்து மாநிலங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்கின்றனர்.

<<<<<>>>>>

குடிமைப்பணி, ஐ ஐ டி உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகளுக்கு விண்ணப்பித்திருந்த மாணவர்களில் பல்வேறு காரணங்களுக்காக கட்டணத் தொகையை திருப்பித்தருமாறு கோரியுள்ள 656 மாணவர்களுக்கு அதனை திருப்பித்தர மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக நுகர்வோர் நலத்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த மத்திய நுகர்வோர் நலத்துறை செயலர் திருமதி நிதிகரே, அரசின் பயிற்சி பள்ளிகளிலும், தனியார் நிறுவனங்களிலும் இணைந்து நுழைவுத் தேர்வுக்கு தயாராவதற்காக இவர்கள் கட்டணம் செலுத்தியதாகவும், பல்வேறு காரணங்களை சுட்டிக்காட்டி அவர்கள் அளித்த புகாரின் அடிப்படையில் இந்த தொகையை திருப்பித்தர மத்திய அரசு முடிவு செய்துள்ளதாகவும் கூறினார்.

இதன் அடிப்படையில் ஒரு கோடி ரூபாய்க்கும் மேலான தொகை மாணவர்களுக்கு திருப்பி அளிக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<<>>>>>

இந்திய கடற்படையின் சார்பில் ஐந்தாவது கோவா கடல்சார் கருத்தரங்கு நாளை கோவாவில் உள்ள கடற்படை பயிற்சி கல்லூரியில் தொடங்குகிறது.

இதுதொடர்பாக பாதுகாப்புத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்திய பெருங்கடல் மண்டல நாடுகளுக்கு இடையே கடல்சார் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில் ஆண்டுதோறும் கோவா கடல்சார் கருத்தரங்கு நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளது.

இந்திய பெருங்கடல் மண்டல நாடுகளில் பொதுவான பாதுகாப்பு பிரச்சினைகள், சவால்கள் குறித்தும், அதனை திறம்பட கையாள்வதற்கான நடைமுறைகள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

சட்ட விரோத கடல்சார் குற்றங்களை தடுப்பது மற்றும் மீன்பிடி எல்லைகளில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பது உள்ளிட்டவை குறித்தும் இதில் விவாதிக்கப்பட உள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெறும் கோவா கடல்சார் மாநாட்டில் பங்களாதேஷ், இந்தோனேஷியா, மடகாஸ்கர், மலேசியா, மாலத்தீவு, மொரிஷியஸ், மியான்மர், செஷல்ஸ், சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகள் பங்கேற்கின்றன.

கென்யா மற்றும் தான்சானியா நாடுகளிலிருந்து பார்வையாளர்கள் இந்த கடல்சார் கருத்தரங்கில் கலந்துகொள்கின்றனர்.

*<<<<<>>>>>*

மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதியில் நாளை குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, தென் தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் பகுதிகளில் 55 கிலோமீட்டர் வேகம் வரை எட்டக்கூடிய சூறாவளி காற்று வீசக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*<<<<<>>>>>*

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் உள்ள பிர்மிங்ஹாம் நகரில் அடையாளம் தெரியாத நபர்களால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில், நான்கு பேர் உயிரிழந்தனர். 10-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

*<<<<<>>>>>*

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**Gama** சர்வதேச தற்காப்பு கலைக்கான சாம்பியன் பட்டத்தை இந்திய மல்யுத்த வீரர் சங்ராம் சிங் வென்றுள்ளார்.

இந்திய வீரர் இப்பட்டத்தை வெல்வது இது முதல் முறையாகும்.

ஜார்ஜியாவில் நடைபெற்ற 93 கிலோ எடைப்பிரவு இறுதிப்போட்டியில், அவர், 90 வினாடிகளில் பாகிஸ்தானிய வீரர் **Ali Raza Nasir** –ஐ வென்றார்.

------------

பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 280 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

***<<<<<END>>>>>***